**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 2 - 2013**

**TAMIL LANGUAGE**

**PAPER 2**

**PRIMARY 5**

NAME: ______________________

CLASS: 5________

DATE: __________

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
ANSWER ALL QUESTIONS.

| | |
|---|---|
| | 90 |

PARENT'S SIGNATURE : ______________

*வினா 2*

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் உதவிச் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதப் பயன்படுத்திக் கொள்ளலாம்:



| | |
|---|---|
| பெருமையடித்துக்கொண்டு | யாருக்கும் தெரியாமல் |
| பொறாமை | ஆசிரியரிடம் தெரிவித்தாள் |
| உடற்பயிற்சி வகுப்பு | விசாரித்தார் |
| வயிற்றுவலி ஏற்பட்டதுபோல் | அச்சத்தால் நடுங்கினான் |

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1,2,3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு

## *"அ" பிரிவு*

### A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு (12 மதிப்பெண்கள்)

பாலு ஒரு கடையில் வேலை செய்து வந்தான். அவன் தனது (Q1)________ சிக்கனமாகச் செலவு செய்து வந்தான். அவன் மாதந்தோறும் (Q2)________ இருக்கும் தன் வயதான தாயாருக்குப் பணம் அனுப்புவான்.

ஒரு நாள் அவனுடைய (Q3)________ உடல் நலம் சரி இல்லாமல் போய்விட்டது. அதை அறிந்து வருந்திய பாலு, எப்படியாவது (Q4)________ தாயாரைக் காண வேண்டும் என்று எண்ணினான். உடனே, தன் முதலாளியைப் பார்த்து விடுப்புக் கேட்கக் கடைக்குச் சென்றான். அவனுடைய (Q5)________ அவன் மிகுந்த கவலையால் வாடுகிறான் என்பதை முதலாளி தெரிந்துகொண்டார். அவர் அவனுக்கு விடுப்பு (Q6)________ மட்டுமல்லாமல் பண உதவியும் செய்தார். நன்றி உணர்வால் பாலுவின் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

Q1 (1) சம்பளத்தில்
(2) சம்பளத்துக்கு ( )
(3) சம்பளத்தை
(4) சம்பளத்தின்

Q2 (1) வெளியூருக்கு
(2) வெளியூரில் ( )
(3) வெளியூரை
(4) வெளியூரை

Q3 (1) தாயாரை
(2) தாயாருடன் ( )
(3) தாயாரின்
(4) தாயாருக்கு

Q4 (1) தனக்கு
(2) தனது ( )
(3) தன்னை
(4) தன்னுடன்

Q5 (1) முகக்குறிப்பை
(2) முகக்குறிப்பின் ( )
(3) முகக்குறிப்பிலிருந்து
(4) முகக்குறிப்பில்

Q6 (1) கொடுத்ததை
(2) கொடுத்ததற்கு ( )
(3) கொடுத்ததோடு
(4) கொடுத்ததால்

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை OAS விடைத்தாளில் நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7 அன்பிருந்தால் ____________________ ஆகும்.

(1) அனைத்தும்
(2) ஆகாததும்
(3) எதுவுமே
(4) எல்லாமே

( )

Q8 உடையவன் பாராத ____________________ ஒரு முழம் கட்டை.

(1) செயல்
(2) வேலை
(3) சொத்து
(4) குடும்பம்

( )

Q9 செயற்கரிய செய்வார் பெரியர் ____________________
செயற்கரிய செய்கலா தார்.

(1) பெரிய
(2) சிறியவர்
(3) சிறியர்
(4) பெரியோர்

( )

Q10 எண்ணும் ____________________ கண்ணெனத் தகும்.

(1) சொல்லும்
(2) வாக்கும்
(3) மொழியும்
(4) எழுத்தும்

( )

Q11 ____________________ ஆயிரம் பொன் தரும்.

(1) அன்பு
(2) அடக்கம்
(3) அமைதி
(4) அறிவு

( )

Q12 மகன்தந்தைக்கு ____________________ உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) ஆற்றும்
(2) இயற்றும்
(3) செய்யும்

( )

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

| |
|---|
| பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி. |

அக்பர் என்ற அரசரிடம் சுல்தான் கான் என்னும் ஓர் அமைச்சர் வேலை செய்தார். அவர் தன் மகனை அரண்மனையில் ஒரு நிதி அமைச்சராக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக அவர் பல திட்டங்களைத் *தந்திரமாகத்* தீட்டி வந்தார். அரசரிடம் பீர்பால் என்ற மற்றொரு அமைச்சர் நெருங்கிப் பழகுவதை சுல்தான் கான் வெறுத்தார். பீர்பாலால்தான் தன் மகனுக்கு எந்தப் பதவியும் கிடைப்பதில்லை என்று எண்ணினார். அதனால் பீர்பாலை எப்படியாவது அரண்மனையிலிருந்து *விலக்க* வேண்டும் என்று அவர் நினைத்தார்.

ஒரு நாள் பீர்பால் அரண்மனைக்குத் தாமதமாக வந்தார். இதைக் கண்ட சுல்தான் கான் உடனே அரசரின் அருகில் போய், " பீர்பால் பொறுப்பைச் சாதரணமாக நினைக்கிறார். இவர் பலமுறை அரண்மனைக்குத் தாமதமாக வந்துள்ளார்." என்று குறை கூறினார். அக்பருக்குக் கோபம் தலைக்குமேல் ஏறியது. உடனே அவர், " நீ சொல்வது சரிதான். அவரைத் தண்டிக்க வேண்டும்," என்று சினத்தோடு மொழிந்தார்.

சுல்தான் கானுக்குத் தன்னுடைய திட்டம் நன்கு வேலை செய்வதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது. அவர் உடனே அக்பரிடம், "மன்னா, இன்று பீர்பால் உங்களிடம் எதைக் கேட்டாலும் மறுப்பு கூறுங்கள்," என்று கூறினார். அக்பரும் அதற்குச் சம்மதித்தார். அச்சமயம் பீர்பால் அக்பரிடம் வந்து, "மன்னியுங்கள் அரசே, என் மனைவிக்கு உடல் நலம் சரியில்லை. அதனால் தாமதமாகிவிட்டது," என்றார். அதற்கு அக்பர் "இல்லை!" என்று கூறினார். பீர்பாலுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. இதே போல் அவர் பல முறை அக்பரிடம் எது கேட்டாலும் அக்பர் இல்லை என்று கூறிக் கொண்டே இருந்தார். பீர்பால் வியப்புடன் சுற்றும் முற்றும் பார்த்தார். சுல்தான் கான் சிரிப்பதைப் பீர்பால் பார்த்தார். இது சுல்தான் கானுடைய திட்டமாகத் தான் இருக்க வேண்டும் என்பதை அறிந்தார். அவருக்குச் சரியான பாடம் *கற்பிக்க* வேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

புத்திசாலியான பீர்பால், அக்பரிடம் "கடைசியாக ஒன்றே ஒன்று கேட்கிறேன், அரசே! சுல்தான் கானின் மகனை நிதி அமைச்சராக ஆக்குங்களேன்," என்றார். அக்பர் உடனே "இல்லை! என்றுமே அவனை நிதி அமைச்சராக ஆக்கமாட்டேன்," என்றார். பீர்பால் புன்னகையுடன் சுல்தான் கானைப் பார்த்தார். சுல்தான் கான் திகைப்பும் கோபமும் அடைந்தார். பீர்பால் தன் புத்திக் கூர்மையால் தன்னை வென்று விட்டார்

என்று கோபத்துடன் சுல்தான் கான் நினைத்தார். இனி தன் மகனுக்கு நிதி அமைச்சராக வர வாய்ப்பு இல்லை என்பதை உணர்ந்து மிகுந்த ஏமாற்றத்துடன் வாயடைத்து நின்றார்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. சுல்தான் கான் ஏன் பீர்பாலை வெறுத்தார் ?

(1) தன் மகனின் பதவியைப் பீர்பால் எடுத்துக்கொண்டதால்
(2) பீரபால் பல திட்டங்களைத் தந்திரமாகத் தீட்டுவதால் ( )
(3) அரசருடன் பீர்பால் நெருக்கமாகப் பழகுவதால்
(4) தன் மகனுக்கு அரச பதவி கிடைக்காமல் போனதால்

Q14. எது அரசரைக் கோபம் அடைய செய்தது?

(1) பீர்பால் அரண்மனையில் இருந்து விலகிக் கொண்டது
(2) பீர்பால் அரண்மனைக்குத் தாமதமாக வந்தது ( )
(3) பீர்பால் அரண்மனைப் பொறுப்பை ஏற்காதது
(4) பீர்பால் மனைவி மேல் அக்கறை காட்டியது

Q15. சுல்தான் கானுக்கு எப்போது மகிழ்ச்சி ஏற்பட்டது?

(1) பீர்பால் அரண்மனைக்குத் தாமதமாக வந்தபோது
(2) பீர்பாலின் மனைவிக்கு உடல் நலம் இல்லை என்பதை அறிந்தபோது
(3) அரசர் பீர்பாலைத் தண்டிக்க வேண்டும் என்று சொன்னபோது ( )
(4) அரசர் பீர்பாலைப் பதவியிலிருந்து நீக்கியபோது

Q16. பீர்பால் சுல்தான் கானின் திட்டத்தை எவ்வாறு அறிந்தார்?

(1) அக்பர் எல்லாவற்றுக்கும் முடியாது என்று சொன்னதிலிருந்து
(2) அக்பர் எல்லாவற்றுக்கும் சம்மதம் கூறியதிலிருந்து ( )
(3) சுல்தான் கான் அவரை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்ததிலிருந்து
(4) சுல்தான் கான் அவரைப் பார்த்து நகைத்ததிலிருந்து

Q17. சுல்தான் கான் ஏன் கோபம் அடைந்தார்?

(1) பீர்பால் தன் புத்திசாலித்தனத்தால் தன்னை வென்றதால்
(2) பீர்பாலின் பேச்சை அக்பர் மறுத்துப் பேசியதால்
(3) தன் மகனுக்குப் பதவி கிடைக்க பீர்பால் உதவாததால்
(4) தன் திட்டம் நிறைவேறவில்லை என்பதால்

( )

B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை OAS விடைத்தாளில் நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18 தந்திரமாக

(1) தன்னலமாக
(2) வஞ்சகமாக
(3) நகைப்பாக
(4) திறமையாக

( )

Q19 விலக்க

(1) விரட்ட
(2) ஒழிக்க
(3) அழிக்க
(4) நீக்க

( )

Q20 கற்பிக்க

(1) தந்திட
(2) பயில
(3) புகட்ட
(4) கற்க

( )

## B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

சிங்கப்பூர் தமிழ் இலக்கிய மன்றம் நடத்தும்

# தமிழ் இலக்கியப் போட்டிகள்

*இடம்: பிடோக் சமூக மன்றம்*

***தொடக்கநிலை 1 & தொடக்கநிலை 2***
***கதை சொல்லும் போட்டி***

நாள் : 14 மார்ச் 2009 (சனிக்கிழமை )

நேரம் : காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை

அனுமதி : இலவசம்

***தொடக்கநிலை 3 & தொடக்கநிலை 4***
***பாவனைத் திறன் போட்டி***

நாள் : 21 மார்ச் 2009 (சனிக்கிழமை)

நேரம் : காலை 8.30 மணி முதல் பகல் 12 மணி வரை

கட்டணம் : $5

***தொடக்கநிலை 5 & தொடக்கநிலை 6***
***பேச்சுப்போட்டி***

நாள் : 28 மார்ச் 2009 (சனிக்கிழமை)

நேரம் : காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை

கட்டணம் : $5

சிங்கப்பூர் ஒளிபரப்புக் கழகத்தின் தலைவரான
திரு. முருகன் மாணவர்களுக்காக ஒவ்வொரு
போட்டியின் முடிவிலும் பகல் 12 மணியிலிருந்து 1
மணி வரை மந்திரத் தந்திரக் காட்சிகளைப்
படைப்பார்.
அனுமதி இலவசம்!

*சிறுவர்களே! உங்கள் திறனைக் காட்ட வாருங்கள்!*
போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச உணவு வழங்கப்படும்.
மேலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் சான்றிதழ் அளிக்கப்படும்.

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. தமிழ் இலக்கியப் போட்டிகள் நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் யார்?

(1) பிடோக் சமூக மன்றம்
(2) சிங்கப்பூர் ஒளிபரப்புக் கழகம்
(3) தமிழ் இலக்கிய மன்றம் ( )
(4) திரு முருகன்

Q22. சிறுவர்கள் எந்தெந்த நிகழ்ச்சிகளுக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்?

(1) பேச்சுப்போட்டிக்கும் பாவனைத் திறன் போட்டிக்கும்
(2) கதை சொல்லும் போட்டிக்கும் பாவனைத் திறன் போட்டிக்கும் ( )
(3) பேச்சுப்போட்டிக்கும் கதை சொல்லும் போட்டிக்கும்
(4) மந்திரக் காட்சிக்கும் பேச்சுப்போட்டிக்கும்

Q23. யார் இலவசமாக மந்திரக் காட்சிகளைப் பார்க்க முடியும்?

(1) பிடோக் வட்டாரத்தில் வாழும் மக்கள்
(2) போட்டியில் பங்கெடுக்கும் மாணவர்கள் ( )
(3) விருப்பம் உள்ள மாணவர்கள் அனைவரும்
(4) பிடோக் சமூக மன்ற உறுப்பினர்கள்

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

## *"ஆ" பிரிவு*

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

**Q24.** என் அம்மா பள்ளியில் ஆசிரியராக __________ செய்கிறார். அவர் பள்ளி முடிந்து மாணவர்களின் புத்தகங்களைத் திருத்துவார். Q24 (      )

**Q25.** நான் கடந்த விடுமுறையின் போது இந்தியாவுக்குச் சென்றேன். அங்குப் புத்தகங்களின் __________ குறைவு என்பதால் நான் பல புத்தகங்களை வாங்கினேன். Q25 (      )

**Q26.** கோபு முதலாம் வகுப்பில் படிக்கிறான். அவன் புதிய மாணவன் என்பதால் அவனுக்கு நூலகத்துக்குப் போக __________ தெரியவில்லை. Q26 (      )

**Q27.** திரு அலி எவரஸ்ட் __________ ஏற விருப்பம் கொண்டார். அதற்கான பயிற்சிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார். Q27 (      )

**Q28.** செடிகள் நன்கு வளர உரம் மட்டும் போதாது. சூரிய __________ படும் வகையில் அவற்றை வைக்க வேண்டும். Q28 (      )

| | |
|---|---|
| (1) விழை | (2) விலை |
| (3) ஒலி | (4) ஒளி |
| (5) வேளை | (6) வேலை |
| (7) வழி | (8) வலி |
| (9) | (10) |

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| பாலன் என்ற சிறுவனுக்கு வயது பன்னிரண்டு. அவன் தந்தை அவன் குழந்தையாக இருந்தபோது இறந்துவிட்டார். அவன் தாய் அவனை வளர்க்க மிகவும் சிரமப்பட்டார். அவர் ஒரு (Q29)________ பணியாற்றினார். | Q29.(   ) |
| அவருக்குக் கல்வியறிவு (Q30)________ தன் மகனை நன்கு படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை அதிகம் இருந்தது. அவர்களுடைய | Q30.(   ) |
| (Q31)________ அறிந்த அவர்களின் அண்டைவீட்டார் திரு ராமு | Q31.(   ) |
| அவர்களுக்கு உதவ எண்ணினார். அவர் பாலனுக்கு (Q32)________ பாடம் சொல்லித் தந்தார். மேலும் அவர் வீட்டில் சமைக்கப்படும் | Q32.(   ) |
| உணவையும் பாலனோடு (Q33)________ கொண்டார். பாலனைத் தன் | Q33.(   ) |
| மகனைப் போலவே அவர் (Q34)________. பாலனும் மிகவும் கடுமையாகத் தேர்வுக்காகப் படித்தான். திரு ராமு அவனுக்கு நல்ல ஆதரவும் ஊக்கமும் அளித்தார். தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வின் முடிவுகளும் வந்தன. பாலனின் தலைமையாசிரியர் சிறப்பாகச் செய்த | Q34.(   ) |
| மாணவர்களின் (Q35)________ அழைத்தார். பாலன் முதல் பத்து மாணவர்களில் ஒருவனாக வந்தான். அவன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். அவன் திரு ராமுவுக்கு நன்றி கூறினான். | Q35.(   ) |

| | | |
|---|---|---|
| 1. கருதினார் | 5. பகிர்ந்து | 9. துப்புரவாளராக |
| 2. இல்லத்தரசியாக | 6. யோசித்தார் | 10. மதிப்பெண்களை |
| 3. நிலையை | 7. சமயத்தை | 11. இல்லாவிட்டாலும் |
| 4. கடனுக்கு | 8. இலவசமாக | 12. பெயர்களை |

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

| பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி. |
|---|

அன்று சிராங்கூன் சாலை மிகவும் கூட்டமாக இருந்தது. பொங்கலுக்கு முதல் நாள் என்பதால் பலர் அங்கு வந்திருந்தனர். மேலும் சில பள்ளி ஆசிரியர்களும் அவர்களின் பள்ளி மாணவர்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தனர். ஆசிரியர்களும் மாணவர்களும் பொங்கல் சந்தைக்கு அருகே இருந்த மண்டபத்தில் கூடி இருந்தனர். ஆசிரியர்கள் அங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொங்கலைப் பற்றிய குறிப்புகளை மாணவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தனர்.

முத்துவும் அவன் தந்தையும் பொங்கல் சந்தைக்கு அருகே உள்ள கடையில் கரும்பு வாங்கிக் கொண்டிருந்தனர். முத்து ஆர்வத்துடன் கரும்புகளைத் தேர்ந்து எடுத்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் அருகில் யாரோ பேசுவதைக் கேட்டான். இந்தக் குரல் தனக்கு மிகவும் பழக்கமான குரல் என்று அவனுக்குத் தெரியும். எனவே அவன் உடனே பின்னால் திரும்பிப் பார்த்தான். குரல் வந்த திசையைப் பார்த்த முத்துவுக்கு ஒரே அதிர்ச்சி. அங்குச் சக்கர நாற்காலியில் அவனது தொடக்கப்பள்ளி ஆசிரியர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான்.

அவர்தான் அவனுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை தமிழ் கற்பித்த ஆசிரியர். ஆசிரியர் அருகில் அவன் சென்றதும் ஆசிரியர் அவனை அடையாளம் கண்டு கொண்டார். முத்து தமிழில் எப்போதும் உயர்ந்த மதிப்பெண்கள் பெறுபவன். ஒருமுறை அவன் உணவு உண்ண பணம் கொண்டு வராதபோது அவர்தான் அவனுக்குப் பணம் கொடுத்து உதவினார். அவன் தன் தந்தையை ஆசிரியரிடம் அறிமுகம் செய்து வைத்தான்.

முத்துவின் ஆசிரியர் பிறருக்கு உதவும் நல்ல மனம் படைத்தவர். அவர் மாணவர்கள் நன்றாகச் செய்ய எப்போதும் ஊக்கம் அளிப்பார். அவர் பல மாணவர்களுக்குத் தமிழில் முன்னேறப் பல துணைப்பாட வகுப்புகள் நடத்தியும் இருக்கிறார். அவர் ஒரு வாகன விபத்தில் தன் கால்களை இழந்ததாகக் கூறினார். பேருந்து ஓட்டுநர் ஒருவர் கவனமில்லாமல் எதிரே நடந்த அவரை மோதியதால் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்று கூறினார். முத்துவுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அவன் தன் ஆசிரியரிடமிருந்து விடைப்பெற்றுக் கொண்டு செல்லும்போது

அவர் கைகளை இறுகப் பற்றி " நன்றி! " என்று மெல்லிய குரலில் கண்ணீருடன் சொன்னான். அவன் அவரைப் பார்த்துக் கையசைத்துக்கொண்டே சென்றான். அவனுடைய ஆசிரியர் மனம் நெகிழ்ந்து போனார்.

| |
|---|
| Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்) |

Q36. ஆசிரியர்கள் மண்டபத்தின் அருகில் என்ன செய்துகொண்டிருந்தனர்? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

37. முத்து பின்னால் திரும்பிப் பார்க்கக் காரணம் என்ன? (2 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

38) ஆசிரியர் முத்துவுக்கு எப்படி உதவினார்? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

39) ஆசிரியர் மாணவர்களின் படிப்பில் எவ்வாறு அக்கறை காட்டினார்?
( 4 மதிப்பெண்கள்)

40) ஆசிரியருக்கு எவ்வாறு விபத்து ஏற்பட்டது? (4 மதிப்பெண்கள்)

41) முத்து தன் ஆசிரியரிடம் எவ்வாறு விடைபெற்றுக் கொண்டான்? (4 மதிப்பெண்கள்)

# P5 SA2
# TESTPAPER 9

பாலு ஒரு கடையில்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 2 | 3) 4 | 4) 2 | 5) 3 | 6) 3 |
| 7) 2 | 8) 2 | 9) 3 | 10) 4 | 11) 2 | 12) 1 |
| 13) 3 | 14) 2 | 15) 3 | 16) 4 | 17) 1 | 18) 2 |
| 19) 4 | 20) 3 | 21) 3 | 22) 1 | 23) 2 | 24) 6 |
| 25) 2 | 26) 7 | 27) 10 | 28) 4 | 29) 9 | 30) 11 |
| 31) 3 | 32) 8 | 33) 5 | 34) 1 | 35) 12 | |

36) ஆசிரியர்கள் சிராங்கூன் சாலையில் அமைந்திருந்த பொங்கல் சந்தைக்கு அருகே இருந்த மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொங்கலைப் பற்றிய குறிப்புகளை மாணவர்களுக்கு விளக்கிக் கூறி கொண்டிருந்தனர்.

37)முத்து தன் அருகில் யாரோ பேசுவதைக் கேட்டான்.அந்தக் குரல் அவனுக்கு மிகவும் பழக்கமான குரலாக இருந்தது.இதுவே அவன் பின்னால் திரும்பிக் பார்க்கக் காரணம்.

38)முத்து தொடக்கப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு முறை, உணவு உண்ண பணம் கொண்டு வரவில்லை.அப்போது ஆசிரியர் அவனுக்கு பணம் கொடுத்து உதவினார்.

39)ஆசிரியர் மாணவர்கள் நன்றாகச் செய்ய எப்போதும் ஊக்கம் அளித்தார். மேலும் அவர் பல மாணவர்களுக்குத் தமிழில் முன்னேறப் பல துணைப்பாட வகுப்புகளும் நடத்தி அவர்களின் படிப்பில் அக்கறை காட்டினார்.

40)பேருந்து ஓட்டுநர் ஒருவர் கவனமில்லாமல் எதிரே நடந்த அவரை மோதியதால் ஆசிரியருக்கு விபத்து ஏற்பட்டது.

41) முத்து தன் ஆசிரியரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு செல்லும் போது அவர் கைகளை இறுகப் பற்றி "நன்றி" என்று மெல்லிய குரலில் கண்ணீருடன் சொன்னான். அதன் பிறகு அவரைப் பார்த்து கையசைத்துக் கொண்டே சென்றான்.